NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* Front Page & p2
**Date:** 23 January 2018

# டியோ: தலைமைத்துவ புதுப்பிப்பு முக்கியமானது

ஒரு நாட்டை வழிநடத்திச் செல்ல குறிப்பிடத்தக்க ஆயுளும் ஆற்றலும் தேவைப்படுவதாக துணைப் பிரதமர் டியோ சீ ஹியன் தெரிவித்துஉள்ளார்.

“ஏற்கெனவே மூத்தோராகவும் ஒவ்வோர் ஆண்டும் மேலும் மேலும் மூப்படைந்து வருவோரையும் கொண்ட ஒரு குழுவசம் நாடு முழுவதும் இருப்பதை நீங்கள் விரும்பமாட்டீர்கள். எனவே தலைமைத்துவ புதுப்பிப்பு தேவைப்படுகிறது,” என்று ‘சிங்கப்பூர் கண்ணோட்டம் 2018’ என்னும் மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய திரு டியோ குறிப்பிட்டார்.

கொள்கை ஆய்வுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த இம்மாநாட்டில் உரையாற்றிய அவரிடம் பார்வையாளர் ஒருவர் வினா எழுப்பினார்.

மூத்த அமைச்சர்கள் பற்றியும் அரசாங்கத்தில் மூத்தோரின் அதிகப் பிரதிநிதித்துவம் குறித்தும் அந்த பார்வையாளர் கேட்டதற்கு துணைப் பிரதமர் பதிலளித்தார்.

நல்ல முறையில் நிர்வாகம் தொடருவதை உறுதிசெய்ய அமைச்சரவையில் அதிகமான மூத்தோர் இருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தைத் தாம் ஆதரிப்பதாக அரசாங்க சேவைகளுக்கும் பொறுப்பு வகிக்கும் அவர் சொன்னார்.

“நமது அரசியலமைப்பு முறை முற்றிலும் மாறுபட்டது. இதற்கு முன்பு பிரதமராக இருந்தவர்கள் அமைச்சரவையில் மூத்த அமைச்சர்களாகவோ மதியுரை அமைச்சர்களாகவோ இடம்பெறுவது என்பது அமைச்சரவையில் இருக்கும் இளையர்களுக்குப் பெரிய உதவியாக இருக்கும்.

“எதிர்காலத்தில் தலைமைத்துவ மாற்றம் ஏற்படும்போது புதிய அமைச்சரவை, புதிய பிரதமர், அதுபோன்ற ஏற்பாடுகளின் பலன்கள் ஆகியவற்றை நாம் காண்போம் என்று நம்புகிறேன்.



மாநாட்டில் உரையாற்றிய துணைப் பிரதமர் டியோ சீ ஹியன். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

“இதர நாடுகளைக் காட்டிலும் சிங்கப்பூர் வேகமாக மூப்படைந்து வருகிறது. இருப்பினும் அவ்வாறு வேகமாக மூப்படைதலைச் சமாளிக்க நாம் சிறந்த நிலையில் தயாராக உள்ளோம்,” என்றார் அவர்.

இப்போதைய நிலவரப்படி சிங்கப்பூரில் 65 வயதும் அதற்கு மேற்பட்டோரும் 500,000 என்ற அளவில் உள்ளதாகவும் இந்த எண்ணிக்கை 2030ஆம் ஆண்டில் 900,000ஐ தொடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் திரு டியோ குறிப்பிட்டார்.

மூத்த குடிமக்கள் நம்பிக்கையுடனும் தெம்புடனும் இருப்பதற்கு மத்திய சேம நிதி லைஃப், மெடிஷீல்ட் போன்றவற்றை துணைப் பிரதமர் மேற்கோள் காட்டினார்.

## நான்காம் தலைமுறை அமைச்சர்களின் சிறப்பு

இதே மாநாட்டில் பேசிய நிதி அமைச்சர் ஹெங் சுவீ கியட், “நான்காம் தலைமுறை அமைச்சர்கள் என்பது சிங்கப்பூருக்குச் சிறந்த சேவையாற்ற முயலும் தீவிர சிந்தனை கொண்ட, ஒருங்கிணைந்து செயல்படும் ஒரு குழு,” என்றார். அந்தக் குழுவில் இருக்கும் ஒவ்வொருவருடனும் இணைந்து பணியாற்றும் அனுபவத்தைத் தாம் பெறுவதாகவும் அவர் கூறினார்.

தங்களுக்குத் தலைமை ஏற்பவரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக 16 அமைச்சர்கள் அடங்கிய குழு அறிக்கை வெளியிட்ட பின்னர் நான்காம் தலைமுறை தலைமைத்துவம் பற்றி திரு ஹெங் நேற்று முதல்முறையாக கருத்துரைத்தார்.

அடுத்த பிரதமர் என்பதற்கான கணிப்புகளில் முதலிடத்தில் இருக்கும் மூன்று பேரில் திரு ஹெங்கும் ஒருவர். நேற்றைய மாநாட்டில் பங்கேற்க வந்த அவரிடம் நான்காம் தலைமுறைக் குழுவை வழிநடத்தத் தயாராக உள்ளாரா என்று வினவப்பட்டது.

ஆனால் அந்த வினாவிற்கு அவர் நேரடியாகப் பதில் எதுவும் தெரிவிக்கவில்லை. புதிய தலைமைத்துவ அமைச்சர்கள் ஒரு குழுவாக ஒருங்கிணைந்து செயல்படுவது சிறப்பானது என்றார் அவர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.

**Source:** *Tamil Murasu,* Front Page & p2
**Date:** 23 January 2018

துடிப்பான பொருளியலைக் கட்டிக்காப்பது குறித்து ரவி மேனன் கருத்து

# ‘வரி செலுத்த விரும்பும் சமுதாயம் முக்கியம்’

மக்கள் தொகை மூப்படையும் நிலையில், துடிப்பான பொருளியலைக் கட்டிக்காப்பதற்கு அனைவரையும் உள்ளடக்கும் தன்மை முக்கியம். அதாவது, உலகமயமாதல், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆகியவற்றால் பின்தங்கிவிடுவோருக்கு ஆதரவு அளிக்க வரி செலுத்த விரும்பும் சமுதாயம் இருப்பது அவசியம் என்று சிங்கப்பூர் நாணய ஆணைய நிர்வாக இயக்குநர் ரவி மேனன் (படம்) கூறியிருக்கிறார்.

“அனைவரையும் உள்ளடக்கும் தன்மை அறநெறிப்படி சரியான செயலாகும்,” என்று கொள்கை ஆய்வுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த 2018 சிங்கப்பூர் கண்ணோட்டங்கள் மாநாட்டில் அவர் நேற்று பேசினார். மாநாடு ஃபேர்மன்ட் சிங்கப்பூர் ஹோட்டலில் நடைபெற்றது.

“துடிப்பான பொருளியலைக் கட்டிக்காக்கும் ஆற்றல் கொண்ட சமுதாயம், உலகயமாதலையும் தொழில்நுட்பத்தையும் வரவேற்கும் தாராளப்போக்கு, பின்விளைவுகளைச் சமாளிக்கக்கூடிய ஆற்றல் ஆகியவை அரசாங்கத்தின் நிதி வளங்களைப் பெருமளவு சார்ந்திருக்கப் போகின்றன,” என்றார் அவர்.

இந்நிலையில், மூப்படையும் மக்கள் தொகையால் ஏற்படும் விளைவுகளையும் கருத்தில் கொள்ளும்போது, சமுதாயம், குறிப்பாகப் பொருளியல் வளர்ச்சியால் ஆதாயமடைந்தவர்கள், அதிக வசதியில்லாதவர்களுக்கு ஆதரவளிக்க வரி செலுத்த விழைவது அத்தியாவசியம் என்றார் அவர்.

ஆய்வுக்கழகம் சென்ற வாரம் வெளியிட்ட கருத்துக்கணிப்பு முடிவுகளின்படி, முதியோருக்கான உயர் சமூகச் செலவுக்கு நிதி அளிக்க மக்கள் கூடுதல் வரி செலுத்த வேண்டுமா அல்லது தேசிய கையிருப்புநிதி பயன்படுத்தப்பட வேண்டுமா என்பது குறித்து சிங்கப்பூரர்களிடையே கருத்து வேறுபாடு நிலவியதாகத் தெரிய வந்தது.

ஐவரில் இருவர் அல்லது 40 விழுக்காட்டினர் உயர் வரி செலுத்த விரும்பாமல் கையிருப்புநிதியைப் பயன்படுத்த விரும்பினர். அதே சமயத்தில் 34 விழுக்காட்டினர் உயர் வரி செலுத்துவதையே விரும்பினர். மீதி பேர் நடுநிலையாக இருந்தனர்.

மாநாட்டின்போது நடைபெற்ற கேள்வி பதில் அங்கத்தில், சிங்கப்பூரின் பிறப்பு விகிதம் குறைவதாலும் மக்கள் தொகை மூப்படைவதாலும் வருங்காலத்தில் பொருளியல் வளர்ச்சி மெது அடையும் என்று திரு மேனன் குறிப்பிட்டார்.

ஆனால், முன்பைவிடக் குறைவான வளர்ச்சி விகிதத்தை சிங்கப்பூர் ஏற்றாக வேண்டியிருந்தாலும், உலகமய நகரம் என்ற முறையில் சிங்கப்பூர் மிகவும் குறைவான விகிதத்தில் வளர்ச்சி அடைய முடியாது என்று அவர் எச்சரித்தார்.



இந்நிலையில், எல்லாச் சவால்களுக்கும் மத்தியில் துடிப்பான பொருளியலைக் கட்டிக்காப்பது முக்கியம் என்றார் திரு மேனன்.

“துடிப்பான பொருளியல் அனைவரையும் உள்ளடக்கும் என்றாகாது. ஆனால், துடிப்புமிக்கப் போக்கையும் தாராளப் போக்கையும் நிலைநாட்ட, நாம் அனைவரையும் உள்ளடக்குவது அவசியம்,” என்றார் அவர்.

வரிவிதிப்புப் பற்றி அண்மையில் பேசப்பட்டு வருகிறது. உள்கட்டமைப்பு, சமூகச் செலவுகள் அதிகரித்து வருவதால் வரி உயர்வு அவசியம் எனப் பிரதமர் லீ சியன் லூங் குறிப்பிட்டிருக்கிறார். எந்த வரி, எப்போது உயர்த்தப்படும் என்ற விவரங்களை அவர் வெளியிடவில்லை.

ஆனால், அடுத்த மாதம் 19ஆம் தேதி வரவுசெலவுத் திட்ட அறிவிப்பின்போது விவரங்கள் வெளியிடப்படும் எனப் பலரும் எதிர்பார்க்கின்றனர்.

“ ஒவ்வொரு பணியும் பெருமைக் குரியது. இந்த மனப்பான்மையுடன் நாம் இருந்தால் அனைவரையும் உள்ளடக்கும் சமுதாயத்தை உருவாக்கலாம்.

**சிங்கப்பூர் நாணய ஆணைய நிர்வாக இயக்குநர் ரவி மேனன்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.